விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 196 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 19 வெள்ளிக்கிழமை (03.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படும்

### பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன



(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர் லசந்த விக்ரமதுங்க மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் விவகாரங்கள் உள்ளிட்ட கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்டிருந்த பாரிய குற்றங்கள் தொடர்பான பழைய கோப்புகள் அனைத்தும் மீண்டும் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படும் என வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன

15ஆம் பக்கம் பார்க்க

## யார் ராஜா என்று தேர்தலை நடத்தினால் தெரிந்துவிடும் - சஜித்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் யார் ராஜா என்று தெரிந்துவிடும். நாட்டு மக்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர்

15ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்களிடையே பரவியுள்ள போதை அபாயத்தை ஒழிக்கத் திட்டம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடையே பரவியுள்ள போதைப் பொருள் அபாயத்தை ஒழிக்க விசேட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் வழுக்கி விழுந்த இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தண்ணீரில் வழுக்கி விழுந்த இளம் குடும்

16ஆம் பக்கம் பார்க்க

## இன்று முதல் "அஸ்வெசும" கொடுப்பனவு

(கொழும்பு)

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் கீழ் ஜுன் மாதத்துக்கான முதியோர்

16ஆம் பக்கம் பார்க்க

## பாதாளக் கும்பலுடன் தொடர்பு கிழக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் 4 மணி நேரம் விசாரணை



(கொழும்பு)

பாதாள உலகக் கும்பலுடன் தொடர்பு குறித்து கிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 4 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளது.

வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று (02) காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்த கிழக்கு

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் மாணவர்களுக்கு சிகரெட் விற்பனை 13 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிநொச்சி நகர எல்லைக்குள் பாடசாலை மாணவர்கள் மற்றும் மேலதிக வகுப்பு மாணவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்ததாக புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி 13 கடை உரிமையாளர்களுக்கு எதிராக

15ஆம் பக்கம் பார்க்க

## கேப்பாப்புலவு காணிகளை விடுவிக்கக்கோரி ஞாயிற்றுக்கிழமை மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவு இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பொது மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது

16ஆம் பக்கம் பார்க்க

## நீதிவான்கள், நீதியரசர்கள் மீதான அழுத்தங்கள் குறித்து அவதானம்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும், நீதிவான்கள் மற்றும் நீதியரசர்களுக்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையிலும் அண்மைக்காலமாக பாராளுமன்றம் மற்றும் ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படும் கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கம் தனது தீவிர

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
**க.சுபாஸ்கரன்** அவர்களின்
அன்புத் தாயார்

## அமரர் சரசு கதிரவேலு

தோற்றம்: 07.06.1944 | மறைவு: 02.07.2026

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்.....
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

(C-5970)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## VALIKAMAM WEST PRADESHIYA SABHA, CHULIPURAM.
## INVITATION FOR BIDS (IFB) – Line Ministry & PSDG fund 2026

1. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
2. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026.07.03 until 2026.07.16 from 09:00 hrs to 15:00 hrs.
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below. " Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2026.07.03 until 2026.07.16 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a **non-refundable fee as mentioned in the table.** The method of payment will be by cash. .
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram at or before 10.00 hrs, 2026.07.17 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.**
7. Pre-Bid Conference will be held at **Head office,** Valikamam West Pradeshiya Sabha, Chulipuram commencing at 10.00 am on 2026.07.09
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | 2026.07.03 until 2026.07.16 |
| Pre-Bid Conference | At 10.00 A.M on 2026.07.09 |
| Closing and Opening of Bids | At 10.00A.M on 2026.07.17 |

| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Required Bid Security: Bid Security Amount | Required Bid Security: Bid Security Validity Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Construction of small bridge Ponnalai Cemetery road -1 NP/14/41(17)/02/LM/01/2026 | 2.619 | 84 Days | C9, C8 & C7 Roads | 3000.00 | 49 days | 04.09.2026 | 27,000.00 | 02.10.2026 |
| 02 | Renovation of Siththankerney sivan kovil road NP/14/41(17)/02/PSDG/14/2026 | 3.750 | 84 Days | C9, C8 & C7 Roads | 3000.00 | 49 days | 04.09.2026 | 38,000.00 | 02.10.2026 |

Chairman,
Local Authority Procurement Committee,
Valikamam West Pradeshiya Sabha,
Chulipuram
03.07.2026

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

### ஒப்பந்த அடிப்படையிலான எரிபொருள்நிலைய முகாமையாளர் ஒருவருட கால ஒப்பந்தம்

சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், சேவைச்சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் அடையாள அட்டைப்பிரதி இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த அடிப்படையிலான எரிபொருள்நிலைய முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), சங்கானை எனும் முகவரிக்கு 18.07.2026ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி - ஒப்பந்த அடிப்படையிலான எரிபொருள்நிலைய முகாமையாளர்**

க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் உட்பட 05 திறமை சித்தியுடன் 6 பாடங்களுடனான சித்தி. அத்துடன் க.பொ.த உயர் தரத்தில் 03 பாடங்களுடனான சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

01. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. 18 -45 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. கணணி/தொலைபேசியில் தொழில்நுட்ப அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.
05. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.


**விண்ணப்ப முடிவுத் திகதி -18.07.2026**

தலைவர்
சங்கானை. ப. நோ.கூ.சங்கம்
சங்கானை
021-225-0126

03.07.2026

(C-5968)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 20 . 12 . 1949

மறைவு 03 . 06 . 2026

## அமரர் நல்லதம்பி பத்மநாதன்

பத்மநாதன் என்ற பெயரே பாசம்
பத்மம் போல் மலர்ந்த உன் புன்னகை
உங்கள் உடல் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.

வீட்டின் தூணாய் நின்று எங்களை
தாங்கிய தெய்வம் நீதான்
ஊர் உலகம் அறிந்த உன் உழைப்பு
உன் குடும்பத்திற்கே வழிகாட்டும் தீபம்!

ஓம் சாந்தி ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்,உறவினர்

(2477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# இரகசியங்களை மறைத்தால் இரட்டிப்புத் தண்டனை!



## அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**சிறைச்சாலையிலோ அல்லது வைத்தியசாலையிலோ எத்தகைய நாடகங்களை அரங்கேற்றினாலும், சுரேஷ் சலேவினால் சட்டத்தின் பிடியிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

அவர் செய்த குற்றங்களுக்கான தண்டனையை அவர் கண்டிப்பாக அனுபவித்தே தீர வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானியான சுரேஷ் சலே உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான உண்மைகளையும், இரகசியங்களையும் வெளியிடாமல் தொடர்ந்து மறைக்க முற்படுவாரானால், அவர் இரட்டிப்புத் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அமைச்சர் எச்சரித்தார்.

"சுரேஷ் சலே மட்டுமன்றி, இந்தக் கொடூரத் தாக்குதலுடன் தொடர்புடைய, அதற்குப் பின்னணியில் இருந்த அனைத்து நபர்களுக்கும் நீதிமன்றத்தின் ஊடாக தகுந்த தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்.

குற்றவாளிகள் எவரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பிழைக்க முடியாது என குறிப்பிட்டார். (நி)

## வளர்ப்புப் பிராணிகளை பதிவு செய்வது கட்டாயம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள வளர்ப்புப் பிராணிகளின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும், விசர்நாய் கடி நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கட்டாயமாக்கவும் புதிய சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, "விசர்நாய் கடி நோயை இல்லாதொழித்தல் மற்றும் வளர்ப்புப் பிராணிகளைப் பதிவு செய்தல் சட்டமூலத்திற்கு" அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இந்த புதிய சட்டத்தின் மூலம், வளர்ப்புப் பிராணிகளைப் பதிவு செய்வது சட்ட ரீதியாகப் பலப்படுத்தப்படவுள்ளதுடன், இது தொடர்பான நிறுவனங்களின் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாக வரையறுக்கப்படவுள்ளன.

குறித்த சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக போராட்டங்கள்

(கொழும்பு)

மின்கட்டணம், எரிவாயு விலை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.



வாழ்க்கை சுமையினை குறைக்குமாறு கோஷங்களை எழுப்பியவாறு தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொரளை, மாலபே பகுதிகளில் தீப்பந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நீர்க் கட்டணத்தில் திருத்தமில்லை

### அரசாங்கம் அறிவிப்பு


(கொழும்பு)

அடுத்த நீர் கட்டண திருத்தம் தொடர்பில் அரசாங்கம் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில், இந்த ஆண்டின் எதிர்வரும் 6 மாதங்களுக்கு நீர் கட்டணத்தில் எவ்வித திருத்தமும் மேற் கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார். (நி)

## விசேட சோதனையில் 652 பேர் கைது!



(கொழும்பு)

குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்காக நாடு முழுவதும் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகளின் போது மொத்தம் 652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகளின் போது 26,377 பேர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில், 25 சந்தேக நபர்கள் குற்றச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

அதேவேளை, 129 பேர் நீதிமன்றப் பிடியாணை நிலுவையில் இருந்தவர்கள் ஆவர்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்காக 53 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்தியதற்காக 129 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தவிர, போக்குவரத்து தொடர்பான பல்வேறு குற்றங்களுக்காக 4,249 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (நி)

## சுற்றுலாப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த ஜூன் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 9.90 சதவீத வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 138,241 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில், இந்த வருடம் ஜூன் மாதத்தில் அந்த எண்ணிக்கை 124,551 ஆகக் குறைவடைந்துள்ளது. இலங்கைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடுகளின் வரிசையில் இந்தியாவே தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

கடந்த மாதத்தில் இந்தியாவில் இருந்து 43,423 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது மொத்த வருகையில் 35 சதவீதமாகும்.

இதனைத் தொடர்ந்து பிரித்தானியாவில் இருந்து 10,474 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவில் இருந்து 8,710 சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கை இலங்கை தவறவிட்டிருந்த நிலையில், இந்த வருடத்தில் (2026) 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பாரிய இலக்கொன்றை இலங்கை நிர்ணயித்துள்ளது.

எனினும் வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதியில் மாத்திரம் இதுவரை 1,146,573 சுற்றுலாப் பயணிகள் தீவுக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 3-2 என்ற கோல் கணக்கில் செனகலை வீழ்த்தி பெல்ஜியம் வெற்றி

பிபா உலகக் கோப்பை தொடரின் "ரவுண்ட் -32" சுற்றில், கடைசி கட்டத்தில், அடுத்தடுத்து கோல்கள் அடித்த பெல்ஜியம் அணி, செனகலை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆட்டம் தொடங்கிய முதலே செனகல் வீரர்கள் ஆக்ரோஷமாக ஆடினர். ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் ஹபீப் தியாராவும், 51ஆவது நிமிடத்தில் இஸ்மைலா சாரும் கோல் அடித்து, பெல்ஜியம் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தனர். செனகல் 2-0 என முன்னிலை பெற்று வெற்றியை நெருங்கியது.

தோல்வியின் விளிம்பில் இருந்த பெல்ஜியம் அணிக்கு மாற்று வீரராக களம் புகுந்த ரோமேலு லுகாகு, 86 ஆவது நிமிடத்தில் ஒரு மிரட்டலான கோல் அடித்து நம்பிக்கை தந்தார். அடுத்த 3 நிமிடங்களில் (89ஆவது நிமிடம்) யூரி திலீமன்ஸ், அசாத்திய கோல் ஒன்றை அடித்து ஆட்டத்தை 2-2 என சமன் செய்தார். இதன் பின் ஆட்டம் கூடுதல் நேரத்திற்கு சென்றது.

கூடுதல் நேரத்தின் இறுதி நிமிடத்தில் (120+5 நிமிடம்) பெல்ஜியம் அணிக்கு சாதகமாக பெனால்டி வாய்ப்பு கிடைத்தது.

நடுவரின் வார் தொழில்நுட்ப பரிசீலனைக்குப் பிறகு கிடைத்த இந்த தங்கமான வாய்ப்பை யூரி திலீமன்ஸ் கோலாக மாற்றி, 3-2 என்ற கணக்கில் பெல்ஜியத்திற்கு வரலாற்று வெற்றியை தேடித்தந்தார். இந்த வெற்றியின் மூலம் பெல்ஜியம் அணி, காலிறுதிக்கு முந்தைய சுற்றான ரவுண்ட்-16 சுற்றுக்கு முன் னேறியுள்ளது. தோற்ற செனகல், பரிதாபமாக தொடரிலிருந்து வெளி யேறியது. (நி)



# இங்கிலாந்து- இந்திய அணிகள் மோதும் ரி-20 மழை காரணமாக இரத்து

இங்கிலாந்துக்கு எதிரான முதல் "ரி-20" போட்டியில் இந்தியாவின் அபிஷேக் சர்மா, ஷ்ரேயஸ் ஐயர் அரைசதம் விளாச, இந்திய அணி 189 ஓட்டங்கள் குவித்தது. இதனைத் தொடர்ந்து மழை பெய்ய, போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட "ரி-20" தொடரில் பங்கேற்கிறது. செஸ்டர்-லீ-ஸ்டீரிட் நகரில் நடந்த முதல் போட்டியில், "டாஸ்" வென்ற இந்திய அணி கப்டன் ஷ்ரேயஸ் ஐயர், "பட்டிங்" தேர்வு செய்தார்.

இந்திய "லெவன்" அணிக்கு இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷி, மீண்டும் தேர்வு செய்யப்படவில்லை. அயர்லாந்து தொடரில் விளையாடாத சுழற் பந்துவீச்சா ளர்களான வருண் சக்ரவர்த்தி, ரவி பிஷ்னோய் இந்திய அணிக்கு திரும்பினர்.

இந்திய அணிக்கு சஞ்சு சாம்சன், அபிஷேக் சர்மா ஜோடி ஆரம்பம் தந்தது. லூக் உட் வீசிய முதல் ஓவரில் ஒரு பவுண்டரி அடித்தார் அபிஷேக். சாகிப் மஹமூத் "வேகத்தில்" சஞ்சு சாம்சன் (0) வெளியேறினார். அடுத்து வந்த இஷான் கிஷான் (0) "ரன்-அவுட்" ஆனார். லியாம் டாசன் பந்தில் ஒரு சிக்சர் விளாசிய அபிஷேக், மெகமூது வீசிய 4ஆவது ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடித்தார். இந்த ஓவரில் 21 ரன் கிடைத்தது. மறுமுனையில் ஒத்துழைப்பு தந்த கப்டன் ஷ்ரேயஸ் ஐயர், லூக்உட் வீசிய 5ஆவது ஓவரில் "ஹாட்ரிக்" பவுண்டரி விரட்டினார். அபாரமாக ஆடிய அபிஷேக், 20 பந்தில் அரைசதம் எட்டினார்.

24 பந்தில் 59 ஓட்டங்கள் குவித்த அபிஷேக் சர்மா, சாம் கரண் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் அவுட் ஆனார். திலக் வர்மா(13), ஹர்ஷித் ராணா(0) சோபிக்கவில்லை. மறு முனையில் அபாரமாக ஆடி அரைசதம் அடித்த கப்டன் ஷ்ரேயஸ் ஐயர், 68 ரன்னில் சாகிப் மஹமூத் பந்தில் அவுட் ஆனார். கடைசி கட்டத்தில் அதிரடியாக விளையாடிய ஷிவம் துபே, 3 சிக்சர் 2 பவுண்டரி உட்பட, 21 பந்தில் 42 ஓட்டங்கள் குவித்து, கடைசி வரை அவுட் ஆகாமல் இருந்தார். கடைசி பந்தில், அக்சர் படேல் (3) ரன் அவுட் ஆனார். 20 ஓவர் முடிவில், இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு, 189 ஓட்டங்கள் குவித்தது.

இந்நிலையில், மழை காரண மாக இங்கிலாந்து அணி பட்டிங் செய்வது தாமதமானது. தொடர்ந்து மழை பெய்ததால், ஓவர் குறைக் கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மழை நிற்காத கார ணத்தால், போட்டி கைவிடப் பட்டதாக அறிவிக்கப்பட்டது. (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3374

Search for people, places and things — Nagendram Home

### காவியா




### டருணிகா




### அஸ்வின்





### ஜஸ்மினா




### கஜானா




### அன்ரனி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# மாணவர்கள் மத்தியில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு

## விழிப்புணர்வை ஏற்படுத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை

**(கொழும்பு)-- கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய இளைஞர், யுவதிகள் மற்றும் மாணவர்கள் மத்தியில் எச்.ஐ.வி மற்றும் பாலியல் ரீதியாக பரவக்கூடிய நோய்களின் பரவலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

★ ★ ★

இந் நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்கும், பரவலைத் தடுப்பதற்கும் அரசாங்கம் பல்துறை கூட்டுத் திட்டங்களை அவசரமாக ஆரம்பித்துள் ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சமீபத்திய சுகாதாரப் புள்ளி விபரங்களின்படி, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் இந்தத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.


இந்த விவகாரம் மிகவும் தீவிரமான கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்று என்பதால், அரசாங்கம் உடனடியாகப் பல்துறை ரீதியான தலையீடுக ளைச் செய்யத் தீர்மானித்துள்ளது.

தொற்றுக்கு உள்ளான வர்களில் பெரும்பாலானோர் போதிய விழிப் புணர்வு மற்றும் சரியான புரிதல் இல்லாத காரணத்தினாலேயே இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனவே, மருந்துப் பயன்பாடுகளைத் தாண்டி, முறையான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கே அரசாங்கம் தற்போது முக்கியத்துவம் வழங்கி வருகிறது.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் மாணவர்களை இலக்கு வைத்து விசேட விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

# டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரிப்பு



(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

டெங்கு நோய்க் கட்டுப் பாட்டு பிரிவு விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினத்தில் மாத்திரம் 1025 பேர் டெங்கு நோயினால் பாதிக் கப்பட்டுள்ளனர்.


இந்நிலையில் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 56 ஆயிரத்து 422 ஆக அதிகரித் துள்ளது. (நி)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் ஆலய சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மூலஸ்தான பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் காட்சியும் இடம் பெறும் என ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவ



ஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# சிறுவர் சந்தை

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் சிறுவர் சந்தை இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி முதல் 11 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ் வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் விவேகானந்தன் சாரங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (8)



தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட இடைக் குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை போசாக்கான உணவுப் பழக்கவழக்கம் தொடர்பான ஆற்றுகை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் செம்முகம் அரங்காற்றுகைக் குழுவினரால் இவ் விழிப் புணர்வு ஆற்றுகை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்-சுபேசன்)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-நல்லூர் தெற்கு-றாக்கா லேன் ஸ்ரீ பத்தினாச்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.55 மணி முதல் 10.25 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணி வரை எண்ணெய்க் காப்பு, பால்க் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம் பெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. சோமகேதீஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# கொழும்புத்துறை இந்து ம.வியில் மாணவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் மாணவர் பாராளுமன்றம்-2026 அங்குரார்ப்பண வைபவமும் முதல் அமர்வும் இன்று மதியம் 12.15 மணியளவில் சிவயோக சுவாமிகள் மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் க.தவலீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர் திருமதி. தவநாயகி சிவபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (8)



யாழ்ப்பாணம் வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவும், நிறுவுநர் தின நிகழ்வும் கல்லூரி அதிபர் கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திருவிழா திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப ஆசியும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

(படம்- ஜோசப்நயன்)

## கிளாலி றோ.க.த.க பாடசாலையின் மாணவர் பாராளுமன்றம்



(கிளிநொச்சி)

கிளி/கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர் பாராளுமன்றம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கலவிப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய வளவாளர்கள் மற்றும் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)

## யாழ். மாநகரசபையினால் மின்விளக்குகள் பொருத்தும் செயற்றிட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட மின்விளக்குகளை தேவையான இடங்களில் பொருத்தும் பணிகள் வட்டார ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த செயற்றிட்டமானது ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் தலா 25 மின் விளக்குகள் என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டு வட்டார ரீதியாக பொருத்தப்பட்டு வருகின்றன.



இந்நிலையில் யாழ்.மாநகர சபையின் 2ஆம் வட்டாரமான கந்தர்மடம் வடமேற்கில் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந்தினால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் "ஆத்திசூடி வீதி, உள் ஒழுங்கைகள், பிறவுண்வீதி, சபாபதி வீதி மற்றும் நாச்சிமார் கோவிலடி என்பனவற்றில் முதற்கட்டமாக மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

விரைவில் ஏனைய ஒழுங்கைகளுக்கும் தேவையான இடங்களில் புதிய மின்விளக்குகள் பொருத்தப்படும்" என மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந் தெரிவித்தார்.(8-30-60)

## புத்தக அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் "நூறுமலர்கள் மலரட்டும்" எனும் தொனிப் பொருளிலான "புத்தக அரங்க விழா" இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய 03 தினங்களும் யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறும்.

இன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந் நிகழ்வில் ஈழத்து நூல்களின் அறிமுகமும் இலக்கியக் கலந்துரையாடலும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து நேர காலம், முட்டை ஆகிய நாடகங்களும் இடம்பெறும்.

நாளைய தினம் மாலை 4 மணிக்கு நூல்களின் அறிமுக உரைகளைத் தொடர்ந்து அரோகரா, தலையெழுத்து ஆகிய நகைச்சுவை நாடகங்கள் இடம்பெறும்.

நிகழ்வில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம் பெறும். (8)

## இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் இணைந்து நடத்துகின்ற மாபெரும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை யா/ஸ்ரான்லி வீதிக்கிளையில் இடம் பெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்களைக் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு இணைப்பாளர் ப.உதயணன் அறிவித்துள்ளார். (8)



வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மூளாய் 4 ஆம் வீதியின் புனரமைப்பு பணிகளுக்காக அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர், கிராம மட்ட அமைப்பினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்- கஜிந்தன்)

## யாழ்.தொழிநுட்பவியல் கல்லூரி மைதானத்தில் குளிரூட்டப்பட்ட நடமாடும் கோள்மண்டலம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மாபெரும் குளிரூட்டப்பட்ட நடமாடும் கோள்மண்டலம் நேற்று முன் தினம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரி சமூகத்தினர், அனுசரணையாளர்கள்,நடமாடும் கோள் மண்டலத்தின் இணைப்பாளர், தயாரிப்பாளர் உள்ளிட்ட குழுவினர், யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த மாபெரும் குளிரூட்டப்பட்ட நடமாடும் கோள்மண்டல காட்சிக்கூடமானது ஜூலை 1ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 09 ஆம் திகதி வரை மாலை 05 மணி தொடக்கம் மாலை 06.30 மணிவரையும், இரவு 07 மணி தொடக்கம் இரவு 08.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் அனுமதி பெற்று நடைபெறுவதனால் மாணவர்கள் பாடசாலை ஊடாக முற்பதிவு செய்து வழங்கப்படும் நேரத்தில் இதனை பார்வையிட முடியும். மேலதிக தகவல்களை 077 7826217 அல்லது 076 108 9005 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (8)

## கல்வளை ஞானவைரவர் புகழ்பாடும் இசைப்பாமாலை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்வளை ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வைரவர் புகழ்பாடும் இசைப்பாமாலை வெளியீடு கடந்த 1 ஆம்திகதி ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பாடலுக்கான இசையினை முகிலரசனும் வரிகளை எஸ்.கவிதரனும் குரலினை ஜெசிந்திரன் வழங்க கேதீஸ்வரன் பாடலை தயாரித்துள்ளார்.

நிகழ்வில் சண்டிலிப்பாய் இந்துவின் ஓய்வு பெற்ற அதிபர் வ.சிறிகாந்தன் மதுரகவி காரை எம்.பி அருளானந்தம்,வலிகாம கல்வி வலய ஓய்வு பெற்ற (முன்பள்ளி) உதவிக்கல்விப்பணிப்பாளர் குகநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாகிஸ்தான் பாதுகாப்பு செயலர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஆறாவது இலங்கை - பாகிஸ்தான் பாதுகாப்பு கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக, பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் முஹம்மது அலி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

நேற்று முன்தினம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழுவினருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. (நி)

**Recovery Officer Vacancy**
**அறவீட்டு அலுவலர்**
வடக்கு. கிழக்கு & நாடு பூராவும்
முழுநேரம் / பகுதி நேரம்
ஆண் / பெண்
N & G Ads
- வயது - 25-55
- க.பொ.த. சா / தரம்
- மோட்டார் சைக்கிள் இருக்க வேண்டும்

074 375 2682
074 033 9568
074 253 7694

மாத வருமானம் LKR 100,000+
(செயற்பாட்டின் அடிப்படையில்)
(322)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

**074 196 4945, 076 682 7368**
**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(C-5965)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவி
செல்வி. **இராஜ்மோகன் ரிஷாந்தினி** அவர்கள்
நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சாதாரண தரப் பரீட்சையில்) 6A,3B பெறுபேற்றைப் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.
(7968)
வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

**மணிவிழா வாழ்த்து**




திருமதி. **கல்யாணி விக்கினேஸ்வரமூர்த்தி**
ஆசிரியர்
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை
- பயிற்றப்பட்ட கலைப்பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா

முதல் நியமனம் -1989.11.29

சேவை விபரம்
- யா/ஊறணி கனிஷ்ர வித்தியாலயம் 29.11.1989 - 04.02.1991
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 05.02.1991-31.12.1992
- யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 01.01.1993-06.05.2002
- யா/சிந்மய பாரதி வித்தியாலயம் 06.05.2002- 22.01.2014
- யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை 23.01.2014 - 03.07.2026

எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 03.07.2026 இன்றுடன் ஓய்வு பெறும் ஆசிரியை திருமதி. கல்யாணி விக்னேஸ்வரமூர்த்தி அவர்களை சீரும் சிறப்பும் பெற்று வாழ இறையாசீர் கூறி வாழ்த்துகின்றோம்.
(7957)
வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர்கள்,
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை

## INVITATION FOR BIDS 2026/06
## Valikamam South Pradeshiya Sabha, Chunnakam
### Performance-Based Capital Grants for Revenue Generation Project-2026 & Council Fund

1. The **Chairman, Divisional Procurement Committee (DPC)**, on behalf of the, **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million".**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Contract data, bidding data for **SBD1** Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. **(T.P:021-224-0017,E mail - worksvsps@gmail.com)**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees Rs.3,500.00 only.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 a.m as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam**
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam, commencing at 10.00 AM as stated in table above.**

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2026.07.03 - 2026.07.16 |
| Pre – Bid Conference | At 10.00 A.M On 2026.07.10 |
| Closing and Opening of Bid | At 10.30A.M on 2026.07.17 |

| S. No | Bid ID | Description of Work | Estimate Cost – Civil cost (Rs.Mn) | Contract Period | CIDA /ICTAD Grade & Specialty/ Eligibility | Bid validity Period | Required Bid Security / Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount | Validity Period |
| 01 | NP/14/41(15)/02/05/ PBCG/ 2026/01 | Establishment & Construction of Testing and Quality Assurance Laboratory | 10.93 | 119 Days | C7, C6 and C5 (Building) | 01.10.2026 | 110,000.00 | 29.10.2026 |

Chairman,
Divisional Procurement Committee,
Valikamam South Pradeshiya sabha,
Chunnakam.

03.07.2026

(C-5966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# கீவ் மீது ரஷ்யா தாக்குதல் 10 பேர் உயிரிழப்பு

(கீவ்)

உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா தொடர்ச்சியான பெரும் ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தத் தாக்குதல்களில், குழந்தைகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர், மேலும் பலர் காயமடைந்தனர். குடியிருப்புப் பகுதிகளை ரஷ்யா வேண்டுமென்றே குறிவைத்துள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதலில் வீடுகள், ஒரு ஆம்புலன்ஸ் நிலையம் மற்றும் ஒரு தங்கும் விடுதி உள்ளிட்ட பல கட்டிடங்கள் அழிக்கப்பட்டு தீக்கிரையாகியுள்ளன. (நி)



# வெடித்து சிதறிய 'தால்' எரிமலை

(மணிலா)

பிலிப்பைன்ஸின் படாங்காஸ் மாகாணத்தில் உள்ள "தால்" எரிமலையின் பிரதான எரிமலை வாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் வெடிப்பு நிகழ்ந்தது. இந்த எரிமலை வெடிப்பினால் எரிமலைவாய்ப் பகுதிக்கு மேலே 1,200 மீற்றர் உயரத்திற்கு கரும் சாம்பல் புகைகள் எழுந்தன.

இந்நிலையில் எரிமலைக்கு அருகில் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.


மேலும் பைவோல்க்ஸின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளைக் கண்காணிக்குமாறும், மற்றும் தயார்நிலை குறித்த உளளூர் அரசாங்க வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பைவோல்க்ஸின் அதிகாரப்பூர்வ தகவலின் படி இந்த "தால்" எரிமலையில் ஏற்பட்ட பெரும் வெடிப்பு ஏறத்தாழ நாலரை நிமிடங்கள் நீடித்ததாகத் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் பதிவு செய்த வீடியோ மற்றும் வெப்ப காட்சிப்படங்களை வெளியிட்டனர்.

எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து உடனடியாக குறிப்பிடத்தக்க நில அதிர்வுகளோ அல்லது நில உருக்குலைவு அதிகரிப்புகளோ பதிவாகவில்லை. தற்போது வரை இந்த எரிமலை மீது எச்சரிக்கை நிலை 1-ஐ பராமரித்து வருகின்றனர்.

இந்த எச்சரிக்கையின் கீழ், திடீர் நீராவி உந்துதல் அல்லது நிலத்தடி நீர் வெடிப்புகள், எரிமலை நிலநடுக்கங்கள், சிறிய சாம்பல் வீழ்ச்சி மற்றும் வாயு வெளியேற்றங்கள் ஆகியவை மேலதிக முன்னறிவிப்பின்றி தொடர்ந்து ஏற்படக் கூடும்.


இதனால் "தால்" எரிமலைத் தீவு ஒரு நிரந்தர அபாய மண்டலமாக நீடிப்பதாகவும், அங்கு நிரந்தரமாக வசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தீவிலோ அல்லது எரிமலைவாய்ப் பகுதியிலோ நீண்ட காலம் தங்குவதைத் தவிர்க்குமாறும் அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினர். (நி)



# பனாமா கால்

# சீனா கைப்பற்ற

## ட்ரம்ப்



(வோஷிங்

பனாமா

கைப்பற்ற ஒ

மாட்டோம்

ஜனாதிபதி

தெரிவித்தா

மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் அமைந்துள்ளது பனாமா கால்வாய்.

கரீபியன் கடல் மற்றும் பசுபிக் பெருங்கடலை இணைக்கும் வகையில், 82 கி.மீ. தூரத்துக்கு அமைந்துள்ளது இந்த கால்வாய். உலகின் கடல்சார் வணிகத்தில், 5 சதவீதமும், அமெரிக்காவின் வர்த்தகத்தில், 50 சதவீதமும், இந்த கால்வாய் வழியாகவே நடக்கின்றன. உலகின் முக்கிய கடல் சார் வணிகத்துக்கான இணைப்பாக இந்த கால்வாய் உள்ளது.

அமெரிக்காவால் வெட்டப்பட்ட இந்த கால்வாய், நீண்ட காலம் அமெரிக்காவால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த, 1977 இல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இந்தக் கால்வாயை நிர்வகிக்கும் உரிமையை 1999இல் பனாமாவுக்கு அமெ ரிக்கா வழங்கியது.

ஒவ்வொரு ஆண்டும் 14 ஆயிரம் கப்பல்கள் இந்த பனாமா கால்வாய் வழியாகச் செல்கின்றன. அமெரிக்காவின் கப்பல்களில் சுமார் 75 சதவீதம், பனாமா கால்வாய் வழியாகத்தான் சென்று வருகின்றன. இதற்காக பனாமா பெரும் கட்டணத்தை அமெரிக்காவிடம் வசூலிக்கிறது.

அமெரிக்க கடற்படை கப்பல்களிடம் கூட கட்டணம் வசூலிக்கின்றனர் என்பது தான் டொனால்ட் ட்ரம்பின் குற்றச் சாட்டாக உள்ளது. அமெரிக்க மக்களின் வரிப்பணத்

# வெனிசுலாவில் சிவப்பாக மாறிய வானம்



(காரகஸ்)

கடந்த செவ்வாய்க் கிழமை மாலை கராகஸ் நகரில் வானம் சிவப்பு-செம்மஞ்சள் நிறமாக மாறியதைக் கண்டு வெனிசுலா மக்கள் ஆச்சரியமடைந்தனர்.

இது மக்களிடையே வியப்பையும், என்ன நடக்கிறது என்பது குறித்த பல்வேறு ஊகங்களையும் ஏற்படுத்தியது.

தாழ்வான நிலையில் தென்பட்ட மேகங்கள் இந்தக் காட்சியை இன்னும் விசித்திரமாகவும் மர்மமாகவும் மாற்றின.

கராகஸ் நகரிலிருந்து எடுக்கப்பட்ட காணொளிகள் இணையத்தில் பரவத் தொடங்கியதும், அங்கு என்ன நடக்கிறது என்பது குறித்து சமூக ஊடகப் பயனர்கள் விவாதங்களில் ஈடுபடத் தொடங்கினர். சிலர் இதனை ஒரு கெட்ட சகுனமாகக் கருதினாலும், ஏனையவர்கள் இது ஒரு சாதாரண இயற்கை நிகழ்வு என்பதை அறிந்துகொண்டனர். ஜூன் 24 அன்று வெனிசுலாவைத் தாக்கிய சக்தி வாய்ந்த இரட்டை நிலநடுக்கங்களில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் வானம் சிவப்பு நிறமாக மாறியது மேலும் வரவிருக்கும் பேரழிவின் அறிகுறி என்று மக்கள் அச்சம் அடைந்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ல்வாயை
# முடியாது!
## திட்டவட்டம்

ங்டன்)—


கால்வாயை சீனா ஒருபோதும் அனுமதிக்க ம் என அமெரிக்க தி ட்ரம்ப் திட்டவட்டமாக தார்.

தில் உருவாக்கப்பட்டது இந்த கால்வாய் என்று ட்ரம்ப் மீண்டும் மீண்டும் கூறி வந்தார். சீனாவின் ஆதிக்கத்தில் இருக்கும் பனாமா கால்வாயை அமெ ரிக்கா கைப்பற்றும் என ட்ரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நடந்த நூலகத் திறப்பு விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் பேசிய தாவது:

கடந்த காலத்தில் அமெ ரிக்கா இக் கால் வாயின் கட்டுப்பாட்டை பனாமாவிடம் ஒப்படைத்தது ஒரு முட்டாள் தனமான தவறு. பனாமா கால்வாயை சீனா கைப்பற்ற ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். கட்டுப்பாட்டைப் பெற்ற பிறகு பனாமா போக்குவரத்து துறை கட்டணங்களை உயர்த்தியது. இந்த முக் கியத்துவம் வாய்ந்த கால் வாயில் சீனா செல்வாக்கு செலுத்த முயல்கிறது. அதை நாங்கள் அனுமதிக்க மாட் டோம். என ட்ரம்ப் தெரி வித்தார். (நி)

# வெனிசுலாவில் நிலநடுக்க இடிபாடுகளில் 5 நாட்கள் கழித்து நாய்க்குட்டி மீட்பு



(கராக்கஸ்)

வெனிசுலாவில் நில நடுக்க இடிபாடுகளில் 5 நாட்கள் கழித்து குட்டி நாய் ஒன்று உயிருடன் மீட்கப் பட்டுள்ளது.

வெனிசுலாவில் ஏற்பட்ட இரட்டை நிலநடுக்கத்தால் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. அந்த இடிபாடு களில் சிக்கியிருந்த ஜிசெல் என்ற குட்டி நாய், ஐந்து நாட்கள் கழித்து உயிருடன் மீட்கப்பட்டது.

இடிபாடுகளுக்குள் இரு ந்து மெலிந்த குரல் கேட்ட தையடுத்து, மீட்புக் குழுவி னர் கைகளால் கொங்கிரீட் துண்டுகளை எடுத்து, சுமார் ஐந்து மணி நேரம் போராடி நாயை உயிருடன் வெளியே கொண்டு வந்தனர்.

முதலில், குறுகிய இடை வெளியில் தண்ணீர் போத் தலைக் கீழே இறக்கி, தாகத் தால் வாடியிருந்த நாயை சற்று நிம்மதியடையச் செய்தனர்.

பின்னர், பாதுகாப்பாக வெளியே எடுத்து, பணியா ளரின் கைகளில் வைத்த போது, குட்டி நாய் அவரை நக்கி, வால் ஆட்டி அன்பை வெளிப்படுத்தியது.

இந்த உணர்ச்சிகரமான காட்சி சமூக வலைத்தளங் களில் பரவலாகப் பகிரப்பட்டு, உலகம் முழுவதும் மக்க ளின் இதயத்தைக் கவர்ந் துள்ளது. (நி)

# தாய்வான் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்
## அமெரிக்காவை எச்சரித்த சீனா



(பீஜிங்)

தாய்வான் தொடர்பான விவகா ரங்களை மிகுந்த எச்ச ரிக்கையுடன் கையாளுமாறு அமெரிக்காவை சீன வெளியு றவு அமைச்சர் வாங் யி வலியு றுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் மார்கோ ரூபி யோவுடன் நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் போது அவர் இதனை தெரி வித்ததாக சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்வான் விவகாரத்தில் எடுக்கப்படும் ஒரு சிறிய நகர்வு கூட ஒட்டு மொத்த சூழ்நிலை யையும் பாதிக்கக் கூடும் என்று குறிப்பிட்ட வாங் யி, சீனாவும் அமெரிக்காவும் அனைத்து வகையான அபாயங்களையும் நிர்வகிக்க இணைந்து செயற் பட வேண்டும் என்றும் வலி யுறுத்தியுள்ளார்.

கடந்த மே மாத நடுப்பகுதி யில் பீஜிங்கில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் இடையே நடை பெற்ற உச்சி மாநாட்டைத் தொடர்ந்து இந்தத் தொலை பேசி உரையாடல் நிகழ்ந்துள் ளது.

அந்த மாநாட்டில், தாய்வான் குறித்த இரு நாடுகளின் கருத்து வேறுபாடுகளைத் தவறாகக் கையாள்வது சீனா-அமெரிக்க உறவுகளை மிகவும் ஆபாய கரமான இடத்திற்குத் தள்ளி விடும் என்று ஷி ஜின்பிங், ட்ரம்புக்கு எச்சரித்திருந்தமை குறிப்பிடக்கது. (நி)

# பிள்ளைகளை அடிப்பதற்கு தடை விதித்தது சுவிஸ்

(ஜெனீவா)

சுவிஸ்லாந்து அரசு பிள்ளைகளை அடிப்பதற்கு தடை விதித்துள்ளது. சுவிஸ் அரசு கொண்டு வந்துள்ள இந்த சட்டத்தின்படி, பிள்ளைகளை அடிக் கவோ, அவர்களுடைய சுய கௌர வத்தை பாதிக்கும் வகையில் அவர் களை நடத்தவோ கூடாது.


இந்த சட்டம், பெற்றோருக்கு மட்டு மல்ல, பிள்ளைகளை தற்காலிகமாக கவனித்துக் கொள்பவர்களுக்கும் பொருந்தும். 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி அறிமுக மாகியுள்ள இந்த சட்டத்தின்படி, பிள்ளைகள் வன்முறைக்கு உட்படுத்தப் படாமலும், உடல் ரீதியாக தண்டிக் கப்படாமலும், இழிவுபடுத்தும் வகை யில் நடத்தப்படாமலும் வளர்க்கப் படவேண்டும். சட்டத்தை மீறுவோருக்கு அபராதம் முதல் சிறைத் தண்டனை வரை விதிக் கப்படலாம்.

கடந்த செப்டம்பர் மாதம், சுவிஸ் பாராளுமன்றம் இந்த மாற்றத்துக்கு ஒப்புதலளித்த நிலையில், பிள்ளைகளை அடிப்பதற்கு தடை விதிக்கும் சட்டம் தற்போது நடைமுறை க்கு வந்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு
# புதிய அம்புலன்ஸ் வண்டி



(முல்லைத்தீவு)

ஜனாதிபதியின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சொகுசு நோயாளர் காவு வண்டியொன்று, முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் அவசரச் சிகிச்சை மற்றும் நோயாளி போக்குவரத்துச் சேவைகளை வலுப்படுத்துவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையளிப்பு நிகழ்வு அண்மையில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் நடைபெற்றது.

முன்னதாக இந்த நோயாளர் காவு வண்டி ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது இது உத்தியோகபூர்வ கடமைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் இருந்ததால், நாட்டின் சுகாதாரச் சேவைத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இந்த வாகனத்தைச் சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்க ஜனாதிபதி செயலகம் தீர்மானித்தது.

இதற்கமைய, முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் நலின் பிரேமதாசவிடம் இந்த நோயாளர் காவுவண்டி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. (8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990- இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி-பா-40<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: BSC,பிரதேச சபை உறுப்பினர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/17020 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDM<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/17045 |
| பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>2இல் செவ்<br>உயரம்:5'7'<br>தகைமை/தொழில்- BSC,MSC,Canada<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/17021 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>1இல்செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC,Associate (pvt)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/17046 |
| பிறப்பு:1986-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>உயரம்:6"<br>8இல்செவ்<br>தகைமை/தொழில்: MBBS,Doctor (German)<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/17023 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA,Accountant (PVT)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/17047 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BSC,M.IT, Irrigation Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: B/17024 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>12இல்செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்-College,BSC, Teacher<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/17049 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: O/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/ 17025 | பிறப்பு-1995 - இந்து<br>நட்சத்திரம்-சதயம்<br>கி-பா-28 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BBA, MBA, HRM, Assistant lecturer<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம்<br>தொ.இ: G/17050 |

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 607



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எல்லாம் முடியும்

ஒரு சின்னக் கிராமம். அங்கே இரண்டு பேர். சின்ன வயதில் இருந்தே ஒன்றாக வளர்ந்தார்கள்.

அந்த இரண்டு பேரில் ஒருத்தன் மட்டும் கொஞ்சம் வசதியுள்ளவன். கொஞ்ச நாள் பள்ளிக்கூடம் போனான். படித்தான்.

பிறகு அந்தக் கிராமத்தை விட்டு நகரத்துக்குப் போனான். வியாபாரம் செய்தான். பணம் சேர்ந்தது. பட்டணத்திலே பங்களாக் கட்டிக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டான்.

இன்னொருத்தன் கிராமத்திலேயே மாடு மேய்த்துக்கொண்டு இருந்து விட்டான், பள்ளிக்கூடம் போகவில்லை! படிக்கவில்லை. அந்த கிராமத்தை விட்டு வெளியே எங்கும் போனதில்லை! அதனால் வெளி உலகமே தெரியாமல் வளர்ந்து விட்டான்.

இவன் ஒருநாள் பட்டணத்துக்குப் போகவேண்டியிருந்தது. விவரம் தெரிந்தவர்கள் சிலபேர் துணையோடு அங்கே போய்ச் சேர்ந்தான். மெதுவாக தன்னுடைய பழைய நண்பன் இருக்கிற இடத்தையும் விசாரித்துக் கண்டுபிடித்து போய்ச் சேர்ந்தான்.

அவன் கட்டியிருந்த பெரிய பங்களாவைப் பார்த்து அசந்து போய் நின்றான். அவன் இவனைப் பார்த்ததும் "வாப்பா" என்று சொல்லி உள்ளே கூட்டிக் கொண்டு போனான்.

இவன் மெதுவாக உள்ளே போனான். இவனுக்குப் புரியாத சமாச்சாரங்கள் என்னென்னவோ இருந்தது உள்ளே!

"நீ மிகவும் பெரிய ஆளாகி விட்டாய்" என்றான்.

எல்லாத்துக்கும் காரணம் நான்தான் என்றான் அவன். மிகவும் பெருமையாச் சொன்னான். அது சரி, வெயிலில் வந்தது மிகவும் களைப்பாக இருக்கிறது. ஒரு விசிறி மட்டை இருந்தால் தா என்று கேட்டான் இவன்

"விசிறி மட்டை எதற்கு அது தேவை இல்லை. இதோ இப்போது காற்று வீசச் சொல்கிறேன் பார்!" என்று மின்விசிறி பட்டனை தட்டிவிட்டான். அது சுழல ஆரம்பித்தது. காற்று வந்தது. இவன் ஆச்சரியமாக அண்ணாந்து பார்த்தான். என்ன பார்க்கிறாய். எல்லாம் என்னுடைய விரல் நுனியில். இதை தொட்டால் போதும் அது சுற்ற ஆரம்பித்து விடும்!" என்றான் அவன்.

நீ உண்மையிலேயே பெரிய ஆள்தான் . அது இருக்கட்டும் இருட்டாக ஆரம்பித்து விட்டதே ஒரு சின்ன விளக்கு அல்லது மெழுகுவர்த்தி இருந்தால் கொண்டு வா என்றான்.

அது என்னத்துக்கு வெளிச்சமும் நான் சொன்னால் வரும். என்று சொல்லி ஒரு ஸ்விட்சைத் தட்டினான், உடனே பிரகாசமான வெளிச்சம். மிகவும் ஆச்சரியமாக அதைப் பார்த்தான். அவன் இதை கவனித்தான்.

என்ன ஆச்சரியப்படுகிறாய். இப்போது பார். என்று சொல்லி வானொலிப் பெட்டியைப் போட்டான். அது பாட ஆரம்பித்தது. தொலைக்காட்சிப் பெட்டி ஸ்விட்சைத் தட்டிவிட்டான் அதிலே படம் வர ஆரம்பித்தது.

"பார்த்தியா, என்னால் எல்லாம் முடியும். எல்லாம் விரல் நுனியில்!" என்றான்.

. இந்தச் சமயத்தில் தான் அது நடந்தது.

அதாவது திடீர் என்று மின்சாரம் நின்று விட்டது. கிராமத்து ஆளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் இருட்டாக்கி விட்டாய் வெளிச்சத்தைக் கொண்டு வா!" என்றான்.

மின்சாரம் போய் விட்டது. அதனால் விளக்கு எரியாது" என்றான் அவன் . இவனுக்கு அது புரியவில்லை.

"சரி அப்படி என்றால் விசிறியையாவது போடு" என்றான்.

"ரேடியோவையாவது பாட வை " என்றான்.

"அதுவும் முடியாது!" என்றான்.

"என்ன இப்படி சொல்கிறாய் எல்லாம் விரல் நுனியில் என்னால் எல்லாம் முடியும். நான் தான் காரணம் என்றாய். இப்போது அந்த நான் எங்கே போய்விட்டது?" என்றான் இவன்.

அவன் தலையை தொங்கப் போட்டுக் கொண்டான். இன்றைக்கு நம்மில் பல பேருடைய நினைப்பு இப்படித்தான் இருக்கிறது. அதனால் தான் அவ்வப்போது அல்லாடிக் கொண் டிருக்கிறோம்.

நம் ஆள் ஒருத்தன். ஆஸ்பத்திரியில் படுத்திருந்தான். உடம்பு முழுவதும் கட்டு.

"என்ன நடந்தது?" என்று கேட்டார். அங்கே வந்த ஒருத்தர்.

இவன் தன்னுடைய விரல் நுனியைக் காட்டினான்.

"இதுதான் சேர் காரணம்!" என்றான்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னப்பா சொல்கிறாய்?" என்றார்.

இந்த விரல் நுனியை என் வீட்டு சுவற்றில் வைத்தேன். உடனே என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து போட்டு விட்டார்கள் என்றான் .

"வீட்டுச் சுவற்றில் விரலை வைப்பது தப்பா?" என்றார்.

"விரலை வைப்பது தப்பு இல்லை சேர், அப்படி வைக்கிற இடத்தில் மின்சார வயர் தொங்கிக் கொண்டிருந்தது. அதுதான் தப்பு" என்றான் இவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XXXIV

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

சட்டவிரோதமாக அமையப்பெற்ற தையிட்டி விகாரை தொடர்பில் நீண்டு செல்லும் எதிர்ப்பு என்பது சிங்கள மக்களிடம் மட்டுமல்ல, அது தமிழ் மக்களிடமும் வெறுப்பை ஏற்படுத்த வல்லது.

அதாவது, ஒரு விகாரைக்காகத் தொடர்ந்து ஒவ்வொரு போயா தினத்திலும் எதிர்ப்புத் தெரிவிப்பதானது அவ்வளவு நல்லதல்ல.

அதேவேளை தையிட்டி விகாரைக்கான எதிர்ப்பில் ஆரம்பத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது, தற்போது எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது. இந்த நிலைமை ஆரோக்கியமானதல்ல.

அதேவேளை ஏலவே, போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் குறிப்பிட்டத்தக்கவர்கள் தாம் எடுத்துக் கொண்ட புகைப்படங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டதான தகவல்களும் உண்டு.

ஆக, எத்துணை தியாகத்துடன் மண்விடுதலைப் போராட்டம் நடந்த இந்த மண்ணில், இப்போது சுயதேவையை அடிப்படையாகக் கொண்டு எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொள்கின்ற அளவில் நிலைமை வந்து விட்டது.

இத்தகைய நிலைமைகள் புனிதமான எங்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக ஆக்கிவிடும்.

இது தவிர, இப்படியே தையிட்டி விகாரைக்காகத் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துப் போராடுவது என்பது ஒரு போதும் சாத்தியப்படமாட்டாது.

ஆகையால், இந்தளவோடு தையிட்டி விகாரை தொடர்பில் ஓர் இணக்கப்பாட்டிற்கு நாம் வந்தாக வேண்டும். எனினும் அந்த இணக்கப்பாட்டை நாம் முன்வைப்பது தான் பொருத்தம்.

இங்கு தான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியாக வேண்டும்.

அதாவது, தையிட்டி விகாரை என்பது அகற்றப்படக் கூடிய ஒன்றல்ல.அது உள்ளவாறு பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆம்,முறையற்ற முறையில் ஒரு வழிபாட்டுத் தலம் அமையப் பெற்றிருந்தாலும் அதனை இடித்து அழிப்பதை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதிலும் தமிழர்கள் அதனை ஒரு போதும் ஆதரிக்கமாட்டார்கள்.

எனவே தையிட்டி விகாரை தொடர்பான விவகாரத்திற்கு முடிவு கட்ட வேண்டும். இதை இப்போது நாம் செய்யத் தவறுவோமாயின், எதிர்காலத்தில் தையிட்டி விகாரை அமையப் பெற்றுள்ள காணிகளின் உரிமையாளர்களே பெரும் கஷ்ரங்களை அனுபவிக்க வேண்டிவரும்.

ஆம், உண்மை. இப்போது தையிட்டி விகாரை எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தொடர்ந்தும் அதில் பங்கேற்பார்கள் என ஒரு போதும் நம்ப முடியாது.

ஆகையால் காலத்தை தக்க முறையில் பயன்படுத்தி, தையிட்டி விகாரை விடயத்தில் ஒரு சுமுகமான நிலைமையைக் கொண்டு வருவதுதான் புத்திசாலித்தனம்.

இங்கு தான் நாம் ஏலவே குறிப்பிட்டது போல, தையிட்டி விகாரை தொடர்பில் மாற்று ஏற்பாடுகளை நாம் முன்வைக்க வேண்டும்.

அந்த மாற்று ஏற்பாடென்பது, தையிட்டி விகாரையை தமிழர்களாகிய நாம் பராமரிக்கின்ற பொறுப்பை எடுத்துக் கொள்வதாக இருக்கலாம்.

அதாவது, தையிட்டி விகாரை அமைந்துள்ள வலி வடக்கு பிரதேசசபை அல்லது வலி வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் குறித்த விகாரை பரிபாலனம் செய்யப்படலாம்.

தேவையாயின் பொருத்தமான ஒரு பௌத்த தேரர் விகாரையில் தங்கியிருந்து வழிபாடுகளை ஆற்றுவதும் ஏற்புடையதே.

இவ்வாறான மாற்றுத் தீர்வின் மூலம் எதிர்காலத்தில் தையிட்டி விகாரையை விஸ்தரிப்புச் செய்வது - அதற்காக சுற்றுவட்டத்திலுள்ள காணிகளை அபகரிப்பது என்ற நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

ஆகையால் நாம் கூறிய மாற்றுத் தீர்வு குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

ஆம், தையிட்டி விகாரை தொடர்பிலேயே எங்களின் முழுக்கவனமும் இருக்குமாயின், நாம் செய்ய வேண்டியதை செய்ய முடியாமல் போகும் என்பதுடன் அதற்கான சந்தர்ப்பத்தையும் காலம் எங்களிடம் இருந்து பறித்து விடும்.

அதன் பிற்பாடு எங்கள் இனம் எங்களை வஞ்சித்துவிட்டது என்று நாமே நம்மை வருத்திக் கொள்ள வேண்டி வரும்.

ஆம், தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமையப் பெற்றது என்பதற்காக அது குறித்து நடத்தப்படுகின்ற எதிர்ப்புப் போராட்டமானது; தமிழர்கள் மிகவும் மோசமானவர்கள். அவர்களிடம் ஒற்றுமையும் இல்லை. மாற்றுத் தீர்வும் இல்லை என்பதோடு உலக அசைவு குறித்து அவர்கள் இம்மியும் சிந்திப்பவர்களும் அல்ல. அவர்களிடம் இராஜதந்திரங்களும் இல்லை என்பதான நினைப்பு சர்வதேச சமூகத்திடம் ஏற்பட்டுவிடும்.

அவ்வாறான ஓர் அபத்தமான மனநிலை எங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்திடம் ஏற்பட்டு விட்டால், பின்னர் நாம் தலையால் நடந்தாலும் எங்கள் பற்றிய வெளிநாடுகளின் நினைப்பை ஒருபோதும் சீரமைக்க முடியாமல் போகும் என்பது சாத்தியமான உண்மை.

(திங்கள் தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1078





ஆனால் அருள்மொழிவர்மர் நாகைப்பட்டினம் சூடா மணி விஹாரத்தில் தங்கியிருந்த போது உண்டான சுழிக்காற்று, சோழ நாட்டுக்குள்ளேயே புகுந்து பற் பல அட்டகாசங்களைச் செய்து கொண்டு மேற்கு நோக்கிச் சென்றது.

ஒரே இரவில் அது காவேரியின் இருபுறங்களிலும் தன் லீலைகளை நடத்திக் கொண்டு போய் மறுநாள் கொங்குநாட்டை அடைந்து தேய்ந்து மறைந்தது. அது பிரயாணம் செய்த இடங்களிலெல்லாம் பற்பல சேதங்களை விளைவித்தது மட்டுமன்று அதைத் தொடர்ந்து பெருமழை கொட்டும்படியாகவும் செய்து கொண்டு போயிற்று. மேற்கே போகப் போக மழை அதிகமாகப் பெய்தது. ஆகவே காவேரியிலும் கொள்ளிடத்திலும் அவற்றிலிருந்து பிரிந்த கிளை நதிகளிலும் மறுநாள் முதல் வெள்ளம் அபரிமிதமாக வந்தது. பல நதிகள் கரைகளை உடைத்துக் கொண்டன. மழையினாலும், நதிகளின் உடைப்பினாலும் சோழ நாடெங்கும் வெள்ளக் காடாகிவிட்டது.

ஆனால் இவ்வளவு இயற்கை விபரீதங்களும் சோழ நாட்டு மக்களைப் பீதி கொண்டு செயலிழந்து செய்து விடவில்லை. இவை அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகளாதலால், அம்மாதிரி நிலைமைகளில் என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் அறிந்திருந்தார்கள். அப்போதைக்குக் கோயில் மண்டபங்களிலோ வேறு உயரமான இடங்களிலோ ஏறிக் கொண்டு உயிர் தப்புவார்கள். வெள்ளம் எவ்வளவு அவசரமாக வந்ததோ, அவ்வளவு துரிதமாக வடிந்து போய் விடும். வீடுகளை இழந்தவர்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் உதவியைக் கொண்டு உடனே வீடு கட்டிக்கொள்வார்கள். "ஐயோ! போய் விட்டதே! என்று தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிடமாட்டார்கள்.

சோர்வு சோம்பல் என்பதையே அறியாத தன்னம்பிக்கை கொண்ட மக்கள் அக்காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்திருந்தார்கள். இல்லாவிடில் இன்றைக்கும் உலகம் கண்டு வியக்கும் படியான அற்புதங்களை அவர்கள் சாதித்திருக்க முடியாது அல்லவா?

வானதி கோயில் மண்டபத்தின் மீது ஏறாமல் தவறித் தண்ணீரில் விழுந்ததும் முதலில் மண்டபத்தின் மேல் ஏறியிருந்தவர்கள் கவலை அடைந்தார்கள். ஆனால் உடனடியாக அந்தக் கவலை மாறியது. வானதி, ஜோதிடர் வீட்டுக் கூரைமீது தொத்திக் கொண்டதைப் பார்த்து அவர்களுக்குத் தைரியம் உண்டாயிற்று. இளையபிராட்டி ஓரளவு குதூகலமே அடைந்தாள். வானதியை அபாயகரமான நிலைமைகளில் சிக்க வைப்பதிலும், அவள் எப்படிச் சமாளிக்கிறாள் என்று பார்ப்பதிலும் குந்தவை தேவிக்கு எப்போதும் உற்சாகம் இருந்தது.

வீராதி வீரனான தம்பியை மணந்து கொள்ளப் போகிறவள் நெஞ்சுத் துணிவுள்ள தீர மங்கையாக வேண்டுமென்பதில் இளைய பிராட்டிக்குச் சிரத்தை இருந்தது. அத்தகைய தீரத்தை வானதியின் உள்ளத்தில் வளர்க்கும் பொருட்டுக் குந்தவை பல உபாயங்களையும் தந்திரங்களையும் கையாண்டு வந்தாள். அந்த உபாயங்கள் நல்ல பலன் அளித்திருக்கின்றன என்ற நம்பிக்கையும் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

சில காலமாக வானதி மூர்ச்சையடைந்து விழும் வழக்கத்தை விட்டுவிட்டிருந்தாள் அல்லவா?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஓர் எலிக்குடும்பம்



அழகிய தோட்டம் அழகிய மரங்கள், செடிகள் கொடிகள் செறிந்த சோலை சோலையின் நடுவே மாடி வீடு. மாடி வீட்டுச் சமையல் அறையின் கோடியில் இருந்தது ஒருசிறு எலி வளை அவ்வளை உள்ளே வாழ்ந்தன எலிகள். தகப்பன் எலியும் தாய்எலி ஒன்றும், மின்னி, சின்னி என்றிரு குஞ்சும் வளையல் குடும்பமாய் வாழ்ந்து வந்தன.

மின்னிக் குஞ்சு பெரியது, துடுக்கு சின்னிக் குஞ்சு சிறியது, அடக்கம் ஆயினும் இரண்டும் [illegible]தன. தந்தை எலியும், தாய் எலியும் ஒருநாள் இரைக்கு வெளியே கிளம்பின. "அப்பா நானும்," என்றது மின்னி.

"வேண்டாம் மின்னி! வேண்டாம் நில்லு தங்கை சின்னி தனியாய் வருந்தும் இருவரும் இருங்கள்," என்றது தாய்எலி. சின்னி கேட்டு ஒப்புக் கொண்டது.

அம்மா சொற்படி இருப்போம் என்றது மின்னி பிடியாய் முரண்டி நின்றது. தந்தை எலியும் தடுத்து, "மின்னி! வெளியில் பூனை பொறிகள் உண்டு வளையை விட்டு வாராதே," என்றது.

பெரிய எலிகள் போனதும், மின்னி, "நாமும் வெளியே செல்வோம்," என்றது. தனிமை அஞ்சித் தொடர்ந்தது சின்னி.

[illegible] வெளியே வந்து நின்றன. எங்கும் நோக்கின யாரும் இல்லை. எதிரே கூடம் எங்கும் சாமான். வழுவழுப்பாக இருந்தது கற்றரை அதன்மேற் செல்ல ஆசை எழுந்தது தவழ்ந்து நேரே சென்றன இரண்டும். "அச்சம் இல்லையா? அண்ணா உனக்கு," என்றது சின்னி அச்சமா அச்சம்! என்று மின்னி எடுப்பாய்ப் போனது.

எதிரே இருந்தது ஓர் அலமாரி கதவு சிறிது திறந்து கிடந்தது தாவி உள்ளே குதித்தது மின்னி. தத்தித் தொத்திச் சின்னியுஞ் சென்றது கிண்ணம் நிறைய வெண்ணெய் இருந்தது தட்டு நிறையத் தித்திப்பிருந்தது. வளையில் இருந்தால் என்ன கிடைக்கும்? இங்கே நிறையத் தின்ன லாம் என்று துள்ளிக் குதித்து இரண்டும் தின்றன.

"போதும் போதும், போவோம் வா நீ அம்மா வந்தால் அடிப்பாள் வைவள்,'

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எவன் ஒருவன் தவறு செய்ததில்லையோ – அவன் புதியதாய் எதையும் கற்றுக்கொண்டதில்லை.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாகாண சபைத் தேர்தல் தமிழர்களுக்கு விமோசனமா?

மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டுமென நம் தமிழ் அரசியல் தரப்புகள் கோரி நிற்கின்றன.

ஏலவே மாகாண சபைத் தேர்தல் நடைபெறப்போவதான அறிவிப்புகள் வெளிவந்ததும் நம் அரசியல் தரப்புகள் ஒற்றுமை பற்றிக் கதைத்தன.

தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படாவிட்டால் எல்லாம் அம்போ என்றாகிவிடும் என அவர்கள் கூப்பாடு போட்டார்கள்.

அவர்களின் கூப்பாடு தமிழ் மக்களின் நலன் சார்ந்தது போல மிகச் சிறப்பாகக் கட்டமைக்கப்பட்டது.

ஆனால், அரசியல் களத்தில் அவர்கள் நின்று நிலைப்பதற்கு அவர்களுக்குப் பதவிகள் தேவையாகிறது.

எனவே பாராளுமன்றத் தேர்தலில் பதவி கிடைக்காமல் போனாலும் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால், அதிலாவது போட்டியிட்டு மாகாண சபை உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொள்ளலாமென்ற நோக்கத்தைத் தவிர வேறு எதுவுமில்லை.

அதாவது, மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்ட முடியும் என்பதற்காக மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என நம்மவர்கள் கோரிக்கை விடவில்லை என்பதுதான் உண்மை.

இதை நாம் கூறும் போது, நம் தமிழ் அரசியல்வாதிகளிடம் தமிழ் உணர்வு – தமிழ் மக்களின் உரிமை தொடர்பான அக்கறை இல்லையா? என்று கேட்டால், அறவே இல்லை எனச் சத்தியம் செய்ய முடியும்.

உண்மை. மாகாண சபைத் தேர்தல் நடைபெறப்போகிறது என்றதும் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை அவசியம் என்று கூறியவர்கள், தாங்கள் ஒன்றுபட்டது போலவும் காட்டிக் கொண்டனர்.

ஆனால் இப்போது அந்த ஒற்றுமைப்பாடு பற்றி அவர்கள் எதுவும் கதைப்பதில்லை – ஒன்றுகூடுவதுமில்லை எனும் போது, அவர்களின் ஒற்றுமை தேர்தல் காலத்திற்கானதென்பது தெரிகிறதல்லவா.

இது தவிர, ஏலவே மாகாண சபைத் தேர்தல் நடந்த போது வடக்கு மாகாணசபை எப்படி இயங்கியது, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எப்படிச் செயற்பட்டார்கள், அரசியல் பக்கச்சார்பற்று இருக்க வேண்டிய அவைத் தலைவர் எவ்வாறாக நடந்து கொண்டார் என்பனவற்றையெல்லாம் மீள்வாசிப்புக்குட்படுத்தும் போது,

மாகாண சபை என்பது தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை பதவிக்கும் பழி தீர்ப்புக்குமானதேயன்றி, அது எம் தமிழ் மக்களுக்குச்சேவை செய்வதற்கானதோ அன்றி அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமையை ஓரளவிற்கேனும் உறுதி செய்ய முடியும் என்பதற்கானதோ அல்ல என்பது மேற்போந்தவற்றில் இருந்து நிரூபணமாகிறது.

# நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழிக்க தயாராகிறது பிரத்தியேக சட்டமூலம்

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

(கொழும்பு)

நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழிக்கவும் பாதாளக்குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்குமான பிரத்தியேக சட்டமூலம் இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

பாதாளக் குழுக்களுக்குப் பின்புலமாக இருந்து ஆதரவளித்த அரசியல் தரப்பினர் இந்த புதிய சட்டமூலத்தை எதிர்ப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

தற்போது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் பிரமுகர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது பயங்கரவாதம் இல்லாத போதிலும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களும் போதைப்பொருள் வர்த்தகமும் இன்னும் பாரிய சவாலாக உருவெடுத்துள்ளன. இவற்றை ஒழிப்பதற்கு முறையான மற்றும் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கான பிரத்தியேக சட்டமூலம் இன்னும் இரண்டுமாத காலத்துக்குள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும்.பாதாளக் குழுக்களை முற்றாகக் கட்டுப்படுத்தவும் போதைப்பொருள் பாவனையை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிக்கவும் அரசாங்கம் கடுமையான சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும் என்றார். (ம-7)

# தவறான நிதிப் பரிமாற்றங்களினால் நாடு கறுப்புப் பட்டியலில் உள்வாங்கப்படக்கூடும்

## மத்திய வங்கியின் ஆளுநர் எச்சரிக்கை

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் இலங்கை கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் அபாயத்தைத் தடுத்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டே புதிய நிதியியல் திருத்தச் சட்டமூலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை (02) நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவின் (COPF) கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு பல விசேட திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பொருளாதாரத்துக்கு நேரடியாக செல்வாக்குச் செலுத்தும் துறைகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

மாறிவரும் உலக நடப்புக்கு அமைய நிதி சார்ந்த சட்டங்களை புதுப்பிக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

இலத்திரனியல்முறைமை ஊடாக திருட்டுக்கள் மற்றும் தாக்குதல்கள் உலகளாவிய மட்டத்தில் தீவிரமடைந்த போக்கு காணப்படுகிறது.

தவறான நிதி பரிமாற்றங்களினால் நாடு கறுப்புப் பட்டியலில் உள்வாங்கப்பட்டால் அது பொருளாதாரத்துக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகவே எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்காகவே இவ்வாறான சட்டமூலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றார். (ம-7)

# அமைச்சரவை அங்கீகரித்தும் இழுத்தடிக்கப்படும் நியமனம்

## உதவி ஆசிரியர்கள் அவசர கோரிக்கை

முல்லைத்தீவு மணலாறு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சிங்கள மொழிமூல பாடசாலைகளில் உதவி ஆசிரியர்களாகப் பணியாற்றி வரும் தமக்கு உடனடியாக நிரந்தர நியமனங்களை வழங்க தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இந்தக்கோரிக்கையை முன்வைத்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகால அரசாங்கத்தினால் எங்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை (Cabinet) அங்கீகாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அந்த முடிவு இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இதனால் நீண்ட காலமாக உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும் நாங்கள் பெரும் பொருளாதார மற்றும் தொழில்சார் சவால்களை எதிர்கொண்டுள்ளோம்.

எனவே கடந்த அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எமக்கான நிரந்தர நியமனங்களை தற்போதைய அரசாங்கம் தாமதமின்றி வழங்க முன்வர வேண்டும் என அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,33)

## மணற்காடு சந்தியில் கோர விபத்து

# ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட ஐவர் படுகாயம்

வடமராட்சி கிழக்கு, மணற்காடு சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தொன்றில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குடத்தனை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றிற்கு தனது இரண்டு பிள்ளைகளுடன் பயணித்த தாய் ஒருவரது மோட்டார் சைக்கிளும் மருதங்கேணி நோக்கி இரண்டு ஆசிரியர்கள் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளும் மணற்காடு சந்திப் பகுதியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் இரு மோட்டர் சைக்கிளிலும் பயணித்த ஐந்து பேரும் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் ஆசிரியர் ஒருவரும் பிள்ளைகளை ஏற்றிச் சென்ற தாயும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பல்வேறு விபத்துக்களால் நாளாந்தம் 30 பேர் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் பல்வேறு விபத்துக்கள் காரணமாக நாளாந்தம் சுமார் 30 மனித உயிர்கள் பலியாவதாக சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த, சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் சமூக மருத்துவ விசேட நிபுணர் வைத்தியர் சமித்த சிறித்துங்க இந்த விபர ங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

நாட்டில் ஒவ்வொரு 3 மணித்தியாலங்களிலும் சராசரியாக 4 பேர் வீதம் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். இலங்கையில் விபத்துக்கள் காரணமாக ஆண்டுதோறும் 8,000 முதல் 10,000 வரையிலான மரணங்கள் பதிவா கின்றன.

ஒரு நாளைக்கு சராசரியாக 30 பேர் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். பொதுவாக விபத்துக்கள் என்று கூறும்போது அனைவரும் வீதி விபத்துக்களை மட்டுமே பிரதான மாகப் பேசுகின்றனர்.

எனினும், வீதி விபத்துகளைத் தவிர சமூகத்தில் அதிகம் பேசப் படாத பல விபத்துக்களால் பெருமளவிலான உயிர்கள் பலியாகின்றன.

அதிகாரிகள் கவனம் செலுத்தத் தவறிய அல்லது பொதுமக்கள் மறந்து விட்ட மரணங்களுக்கான காரணங்களாக உயரமான இடத்திலிருந்து கீழே விழுதல், நீரில் மூழ்கி மரணித்தல், மின்சாரத் தாக்குதலுக்குள்ளாதல் மற்றும் விஷப்பாம்புக்கடிக்கு இலக்காகுதல் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

இந்த அனைத்துக் காரணிகளையும் உள்ளடக்கியே நாளாந்த விபத்து மரணங்களின் எண்ணிக்கை 30ஆக உயர்ந்துள்ளது.

தடுக்கக்கூடிய காரணங்களினாலேயே மக்கள் தங்களின் பெறுமதிமிக்க உயிர்களை இழந்து வருவதாகவும், இது ஒரு பெரும் சமூகப் பேரழிவு என்றும் அவர் மேலும் கவலை வெளியிட்டுள்ளார். (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | திருநெல்வேலி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 200 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | -- | 240 | 220 | -- |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 550 | 700 | 600 | 650 |
| தக்காளி | 500 | 400 | 620 | 400 | 750 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 200 | 150 | 240 | 200 | 200 |
| கோவா | 250 | 300 | 250 | 250 | 250 | 220 |
| கரட் | 400 | 400 | 380 | 450 | 400 | 400 |
| பூசணி | 140 | 150 | 100 | 140 | 130 | 120 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 | 200 | 160 |
| வாழைக்காய் | 140 | 100 | 120 | 160 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 450 | 400 | -- |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | -- | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 1000 | 1500 | 1800 | 1400 | 1200 | 1200 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 320 | 300 | 400 | 350 | 300 | -- |
| பயற்றங்காய் | 200 | 200 | 350 | 250 | 600 | 180 |
| லீக்ஸ் | 400 | 350 | 350 | 400 | 400 | 400 |
| பீற்றூட் | 450 | 500 | 400 | 500 | 350 | 400 |
| கறிமிளகாய் | 500 | 450 | 500 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 350 | 500 | 500 | 400 |
| போஞ்சி | 450 | 600 | 600 | 500 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 200 | -- | 160 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 60 | 100 | -- |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 500 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 100 | 110 | 100-140 | 100 | -- |
| இராசவள்ளி | 450 | 400 | 350 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | 350 | 400 | 420 | 500 | 400 | -- |
| முள்ளங்கி | 150 | 200 | 180 | 250 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 150 | -- | 60 | 100 | -- |
| வல்லாரை | 70 | 100 | -- | 120 | 80 | -- |
| ஈரப்பலா | -- | 100 | -- | 200 | -- | -- |

# உலக சந்தையில்

## எரிபொருள் விலைகளில் வீழ்ச்சி

(வோஷிங்டன்)

உலகச் சந்தையில் எரிபொருள் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான யுத்தத்தின் போது எரிபொருள் விலைகள் உச்சத்தை தொட்டிருந்த நிலையில் தற்போது நிலவும் அமைதியான சூழலின் காரணமாக இவ்வாறு விலைகள் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

ஆசியச் சந்தைக்குப் பெரும்பாலான எரிபொருளை வழங்கும் பிரெண்ட் கச்சா எண்ணெயின் ஒரு பரலின் விலை, சுமார் 70.80 அமெரிக்க டொலராகக் குறிப்பிடப்பட்டது.

ஈரான் போர் தொடங்கிய பெப்ரவரி 28 ஆம் திகதியளவில், ஒரு பரல் பிரெண்ட் எரிபொருளின் விலை 70 அமெரிக்க டொலருக்கு அருகில் இருந்தது.

இதற்கிடையில், அமெரிக்காவில் ஒரு பரல் WTI கச்சா எண்ணெயின் விலை 67.87 அமெரிக்க 67.87ஆக பதிவாகியுள்ளது.

போருக்கு முன்பு, அது 68 அமெரிக்க டொலராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# இராசிபலன்

03.07.2026
ஆனி 19, வெள்ளிக்கிழமை
திருதியை முற்பகல் 10.13 மணி வரை


திருவோணம் முற்பகல் 11.13 மணிவரை
சுப நேரம் 5.57-7.27மணிவரை
இராகு காலம் -10.27-11.57 மணிவரை

சந்திராஷ்டமம்- புனர்பூசம், பூசம்
சங்கடகர சதுர்த்தி விரதம்


வளவன்





தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், எண்ணியது நிறைவேறும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வசதி வாய்ப்புக் களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.




வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம், வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள், தந்தை வழி உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கூடும்.




இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூல முண்டு.




குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, குடும்ப பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.




உடல் நலனில் கவனம் தேவை, நட்பு பகை யாதிருக்க கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது.




பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப காரிய பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.




ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வெளியூர்ப் பயணங்கள் விரும்பிய படி கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கஷ்டம் தான் ஒரு மனிதனை அவனுக்கே அறிமுகம் செய்யும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

நேற்று முன்தினம் புதன்கிழமை (1) கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதில் 11 கடை உரிமையாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

நீதிமன்றத்தில் முன்னிலையாகாத ஏனைய 2 கடை உரிமையாளர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் கிளிநொச்சிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது.(ம-7)

## கிழக்கு பிரதிப்...

மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினராக சந்தேகிக்கப்படும் 'கெஹெல்பத்தர பத்மே' என்பவருடனான தொடர்புகள் குறித்து மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்து கொள்வதற்காகவே வருண ஜயசுந்தர இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார். (ம-7)

## நீதிவான்கள்...

அவதானத்தைச் செலுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (1) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சில இடங்களில் பாராளுமன்றம் மற்றும் ஊடகங்களைப் பயன்படுத்திக் கொண்டு சமீப நாட்களாக நீதிவான்களுக்கும் நீதியரசர்களுக்கும் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையிலான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. நீதியரசர்களது வழக்கு தீர்ப்புக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

சந்தேகநபர்கள் மற்றும் சந்தேகநபர்களுடன் தொடர்புடையவர்களாலேயே இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அவர்களது வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளவர்களின் தரப்பிலிருந்தே இவ்வாறு நீதியரசர்களுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

கடந்த ஒன்றரை மாதங்களிலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. தீர்ப்புக்களும் விரைவாக அறிவிக்கப்படுகின்றன. சிலரது மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வழக்கு நடவடிக்கைகள் துரிதமடைந்துள்ளதால் சில குழுக்கள் இவ்வாறு செயற்படுகின்றன. அரசாங்கம் இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது என்றார். (ம-7)

## லசந்த...

தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் நேற்று வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மறைந்த ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் வழக்குகள் தற்போது புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு தினசரி அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் இவ்வாறான பல கோப்புகள் மூடி மறைக்கப்பட்டிருந்தன. வெறும் பெயரளவில் மாத்திரமே விசாரணைகள் பற்றி பேசப்பட்டது. இவற்றுக்கு நீதி பெற்றுத்தருவதாக வாக்குறுதி வழங்கி சிலர் ஆட்சிப் பீடமும் ஏறினர். ஆனால், அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

குறிப்பாக 2015ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் மலர்ந்தபோது இந்த நீதி[illegible]

காகவே மக்கள் ஆணையை வழங்கியிருந்தனர்.

2015ஆம் ஆண்டு வரை நீடித்த மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு இருந்த கடுமையான அதிருப்தி மற்றும் கோபத்தின் காரணமாகவே அந்த மக்கள் ஆணை கிடைத்தது. ஏனெனில், அது ஒரு அடக்குமுறை மற்றும் பயங்கரவாத அரசாங்கமாகவே செயற்பட்டது. மக்கள் பொது வீதிகளில் படுகொலை செய்யப்பட்டனர்.

முக்கியமாக ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக உரிமைகள் பற்றி பேசும் அமைப்புகளிடம் நான் இப்போதும் கேட்கிறேன், உங்களுக்கு அந்தக் கடந்தகால வரலாறு மறந்து விட்டதா? பட்டப்பகலில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர், சிலர் நாட்டை விட்டு வெளியேறினர், சிலரது கை, கால்கள் உடைக்கப்பட்டன, வெள்ளை வான்களில் கடத்திச் செல்லப்பட்டனர் இவற்றுக்குச் சரியான முறையில் நீதியை நிலை நாட்டுவதற்கான மிக நெருக்கமான அதிகார பலம் நல்லாட்சி அரசாங்கத்துக்குக் கிடைத்தது. ஆனால், நல்லாட்சி அரசாங்கம் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு, பழைய பாதையிலேயே பயணிக்கத் தொடங்கியது.

அதேபோன்று, ஒரு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கான மிகச் சிறந்த மக்கள் ஆணை நல்லாட்சி அரசாங்கத்துக்கு இருந்தது. ஆனால், அதிலும் அவர்கள் தோல்வியடைந்தனர்.

இதன் காரணமாக, மிகப்பாரிய சட்ட சீர்திருத்தங்களையும் நல்ல மாற்றங்களையும் கொண்டு வருவதற்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டன.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு மிகப்பாரிய பொறுப்பு இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். பல வருடங்கள் பழைமையான குற்றங்கள் தொடர்பில் ஆராய்வது என்பது இலகுவான காரியம் அல்ல. நீதி நிலை நாட்டப்படும் என்றார். (ம-7)

## தேர்தலை...

சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை (2) விசேட கூற்றொன்றை முன்வைத்து அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் மாத்திரமே அரச பதவிக்கு தகுதியானது ஜே.வி.பியா? அல்லது உண்மையிலேயே பொதுமக்களுடன் இணைந்து நிற்கும் அரசியல் இயக்கமா? என்பதை மக்கள் முன்னிலையில் அறிந்துகொள்ள முடியும். இனியாவது விவசாயிகளை அவமதிப்பதை ஆளும் தரப்பு நிறுத்த வேண்டும்.

இத்தகைய அவமதிப்புகளைச் செய்வதற்கு முன் தங்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியது யார் என்பதை ஆட்சியாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தால் உரிய தீர்வினை வழங்க முடியாவிட்டால், நாட்டின் மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான, யதார்த்தமான, நடைமுறைச்சாத்தியமான மற்றும் முற்போக்கான தீர்வுகளை வழங்குவதற்குத் தங்கள் தரப்பு தயாராக இருக்கிறது என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.07.02 — சீட்டிழுப்பு இலக்கம் 6236 — K 9 1 3 9 2 9
அத சம்பத — K 3 9 2 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0811

சுப தவசக் — திகதி 2026.07.02 — சீட்டிழுப்பு இலக்கம் 8352 — மிதுனம் 50 56 58 — 6594

தன நிதானய — திகதி - 2026.07.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 2266 — E 04 07 12 81 E

மெகா பவர் — திகதி 02/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2584 — N 19 06 10 18 57

ஜய — 2026.07.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0504 — L 0 2 5 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4478 — சீட்டிழுப்பு திகதி 02.07.2026 — N 26 50 55 65

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.02 — சீட்டிழுப்பு இலக்கம் 1545 — மேடம் 18 33 50 58 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபர் பல் சம்பத — 02.07.2026 — வெற்றி வாரம் 0944 — A 1 3 1 8 6 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,954,407.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3210 — 25000 பணப் பரிசு 66032 — சீட்டிழுப்பு திகதி 2026.07.02 — தினம் வியாழக்கிழமை — 04 22 29 68 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,693,392.80

சனிதா — திகதி 02.07.2026 — வெற்றி வாரம் 5371 — 19 22 32 69 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,127,963.60 — 67420

சசிரி — வெற்றி வாரம் 1040 — சீட்டிழுப்பு திகதி 02.07.2026 — வியாழக்கிழமை — 04 08 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,499,360.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4922 — சீட்டிழுப்பு திகதி 02.07.2026 — தினம் வியாழக்கிழமை — 05 25 32 46 — ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,674,202.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — C 35 26 29 36 48 — 2386 — 02.07.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.306,897,449.00

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 3036 — சீட்டிழுப்பு திகதி 2026.07.02 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00 — 23 25 32 60 I


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சலேயிடம் கடவுச் சொற்களை கேட்பது பேரழிவை ஏற்படுத்தும்

## உதய கம்மன்பில எச்சரிக்கை



(கொழும்பு)

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலேயிடம் மடிக் கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசி கடவுச் சொற்களைக் கேட்பது பேரழிவை ஏற்படுத்தும் எனப் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சந்தேக நபர் ஒருவரை வற்புறுத்துவதற்கு நீதிமன்றத்திற்குக்கூட உரிமையில்லை என்பது ஒட்டுமொத்த உலகமும் ஏற்றுக் கொண்ட ஒரு கோட்பாடாகும்.

இந்தக் கடவுச்சொற்களை வழங்காமல் இருப்பதற்கு நான்கு நியாயமான காரணங்கள் உள்ளதாக உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின்படி, சந்தேக நபர் ஒருவர் தமக்கு எதிராக நடத்தப்படும் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டிய எந்தவொரு சட்டக் கடப்பாடும் இல்லை.

சட்டத்தின்படி கடவுச்சொற்களை வழங்குமாறு எவருக்கும் அழுத்தம் கொடுக்கவோ அல்லது பலவந்தப்படுத்தவோ முடியாது என்றும் அது ஒரு முறையற்ற செல்வாக்குச் செலுத்தல் ஆகும்.

தற்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் சிறில் காமினி அருட்தந்தை உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஊடகங்கள் வாயிலாக அத்தகைய முறையற்ற அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் அவர் வலியுறுத்தினார். (ம-7)

## போதை அபாய...

போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டுச் சபை, மூன்று பீடங்கள் மகா சங்கத்தினர் உள்ளிட்ட மதத் தலைவர்களின் பங்கேற்புடன் நேற்று (02) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கூடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் போதை பொருள் பாவனையை தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி இங்கு கேட்டு அறிந்ததுடன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்பூட்டும் வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட 225 திட்டங்கள் தற்போது பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் உப வேந்தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி, மாணவர்களுக்கிடையிலேயே குழுக்களை உருவாக்கி விழிப்புணர்வு வழங்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலை முறைமையினுள் போதைப்பொருள் பரவல் தொடர்பாக நாடளாவிய ரீதியில் ஆய்வு ஒன்றை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் பாடசாலை முறைமையினுள் போதைப்பொருள் அபாயத்தை ஒழிக்கும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக கல்வி அமைச்சின் முன்னெடுப்பில் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களினதும் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றை நியமித்து, பொதுவான திட்டமொன்றின் கீழ் செயற்படுவதன் அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். (ம-7)

## 'அஸ்வெசும'...

கொடுப்பனவுகள் இன்று (3) முதல் வழங்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

அதற்கமைய, 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான இக் கொடுப்பனவின் முதற்கட்டத்தின் கீழ், தகுதிபெற்ற 621,761 பயனாளிகளுக்காக 3,108,805,000.00 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட 76,139 முதியோர்களுக்காக 380,695,000.00 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிதிகள் அனைத்தும் தகுதியான பயனாளிகளின் அஸ்வெசும வங்கி கணக்குகளில் நேரடியாக வைப்பில் இடப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமக்குரிய கொடுப்பனவுத் தொகையை பயனாளிகள் அனைவரும் இன்று முதல் தத்தமது அஸ்வெசும வங்கிக் கணக்குகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என நலன்புரி நன்மைகள் சபையின் மேலதிக ஆணையாளர் டி.எல். பி. ரிஷான் தர்மசேன தெரிவித்துள்ளார். (ம-7)

## ஞாயிற்றுக்...

தொடர்பில் காணி உரிமையாளர்கள் தெரிவிக்கையில்,

கடந்த 17 ஆண்டுகளாக காணி விடுவிப்புக்காக பல்வேறு வழிகளில் போராடி வருவதாகவும் இதுவரை எந்தவித நிரந்தரத் தீர்வும் கிடைக்கவில்லை "இனி வாக்குறுதி அரசியலும் வலியுறுத்தல் அரசியலும் தேவையில்லை. எமக்கு தற்போது தேவையானது செயற்பாட்டு அரசியல் மட்டுமே. ஜனாதிபதி உடனடியாக தலையீடு செய்து காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" அத்துடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (05.07.2026) காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ள கவனயீர்ப்பு போராட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது. (ம-7)

## வழுக்கி...

பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏழாலை மேற்கு புற்றளைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த கோவிந்தராசா ரிசுதன் (வயது - 27) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கோழிப் பண்ணை ஒன்றில் வேலை செய்த போது கடந்த 28 ஆம் திகதி தண்ணீரில் வழுக்கி விழுந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை (02) காலை உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

குறித்த நபர் ஒரு உதைபந்தாட்ட வீரர் ஆவதோடு அவருக்குத் திருமணமாகி ஆறு மாதங்களே ஆகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)


**குழந்தை பராமரிப்பாளர் தேவை**

திருநெல்வேலியில் உள்ள வீடொன்றில் பகுதி நேரத்தில் குழந்தை பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (7960)

077 581 4230, 077 491 0234

**வேலைவாய்ப்பு**

கணக்குப் பிரிவு மற்றும் களஞ்சிய (Store) உதவியாளர்

கணக்கியல் (Accounts) பின்னணியுடன் கூடிய பட்டதாரி அல்லது டிப்ளோமா தகுதி பெற்ற ஒருவரை கணக்குப் பணிகள் மற்றும் களஞ்சிய (Store) பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆட்சேர்ப்பு செய்ய விரும்புகிறோம். (2479)

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் 077 136 3034

நீங்கள் எதிர்பார்த்திருந்த... A/L - 2026 மாணவர்களுக்கு...

N.BABU ஆசிரியரின்...

புவியியல் கருத்தரங்கு

யூலை - 04,05,09,10 திகதிகளில்

ஆரம்பம் – 04.07.2026 (சனிக்கிழமை – 10 A.m)

முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் ஆராயப்படும்.

புதிய, வெளி மாணவர்கள் பங்குபற்றலாம்.

DMI

ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (7951)

077 936 5087

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சாங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5969) 076 825 7716 (ஆகாஸ்)

**காணி விற்பனைக்கு**

வவுனியாவில் வைரவபுளியங்குளத்தில் 10 பரப்பு அறுதி உறுதிக் காணியும், கணேசபுரத்தில் 1.5 ஏக்கர் உறுதிக் காணியும் விற்பனைக்கு உண்டு. (2472)

தொடர்புக்கு 077 524 5913

**பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்**

பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்
ஒவ்வொரு பகிர்வுக்கும் பின்விளைவுகள் உள்ளன.

வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டும் தகவல்களை உணர்ச்சிவசப்பட்டோ அல்லது திட்டமிட்டோ பகிர்வது கோபத்தையும் வன்முறையையும் அதிகரிக்கிறது.

இத்தகைய பெரும்பாலான கட்டுக்கதைகள் மக்களின் உணர்வுகளை தன்நலத்திற்காக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டு மறைமுக அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக பரப்பப்படுகின்றன.

**நிறுத்துங்கள், சிந்தியுங்கள், உறுதிப்படுத்துங்கள்**
வெறுப்பின் கருவியாக மாறாதீர்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது. (7775)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.